# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## EA.No.31/2025 in EP.No.3/2023 in RLTOP No.1/2020

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 09 –ம் நாள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியின் எ.ம.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 09.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. குமார் (RW–1 ) | வயது | : | 53/2026 |
| க/த பெயர் | : | திரு. கண்ணன் | தொழில் | : | மெக்கானிக் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்தின் உரிமையாளர் ரமேஷ் தான் என்று என்னை அணுகினாரா என்றால் ஆமாம். RLTOP 01/2020 வழக்கில் 100 சதுரடிக்கு தான் உத்தரவு எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் தமிழரசனும் தாவா சொத்து குறித்து ஏற்படுத்திக்கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் உரிமையாளர் தமிழரசன் இல்லை என்பதால்தான் அந்த வாடகை ஒப்பந்த பத்திரத்தை பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது என்றால் ஆமாம்.
2) தாவா சொத்தின் உரிமையாளர் சம்பத்குமாரின் வாரிசுதாரர்கள் தான் என்றும் நானும் தமிழரசனும் தாவா சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமையாளர் தமிழரசன் தான் என்பதற்காக எந்த உரிமை மூல ஆவணத்தையும் என்னிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது தமிழரசன் பெயரில் இருப்பதாக நகரளவு ஆவணங்களில் ஏதும் இல்லை என்றால் சரிதான்.
3) தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் சம்பத்குமாரின் வாரிசுதாரர்கள் தான் என்றும் சம்பத்குமாரின் வாரிசுதாரர்களின் அதிகாரம் பெற்ற முகவரான ரமேஷிடம்தான் நான் வாடகை பணம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, நீதிமன்ற தீர்ப்பின்படி வாடகை பணம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன். தாவா

சொத்து குறித்து நானும் தமிழரசனும் ஏற்படுத்திக்கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரம் மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 19:00:18 +0530

District Munsif

Mannargudi.